**அரச ஈட்டு, முதலீட்டு வங்கி - 2010**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிரயாம்

எனது பரிசீலனைகளிலிருந்து தென்படுவதும் எனக்களிக்கப்பட்ட அதி உயர் தகவல்கள் மற்றும் விளக்கங்கள் என்பவற்றிற்கமைய அரச ஈட்டு முதலீட்டு வங்கி 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக்கூற்றுக்களானவை, இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினால் நிதிக் கூற்றுக்களில் ஏற்படும் தாக்கங்களைத் தவிர இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கிணங்க 2010 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான அரச ஈட்டு முதலீட்டு வங்கியின் நிலவரம் மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் தொழிற்பாட்டின் விளைவுகள் மற்றும் காசுப் பாய்ச்சல் என்பனவற்றை உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் தயாரிக்கப்பட்டிருந்தன. என்று நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) இ.க.நி.36 இன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களில ரூபா 508,648 தொகையான இழப்பீட்டிற்கான வெளிப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முற்பணக் கொடுப்பனவாகக் காட்டப்பட்ட இருப்பு முறைமைக்கான மென்பொருளுக்காக ரூபா 379,500 ஆன பெறுமதி இ.க.நி. 37 இன் பிரகாரம் மூலதனமாக்கப்பட்டு, காலக்கழிவு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

### 1.2.2 கிடைக்க வேண்டிய மற்றும் கொடுபட வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ரூபா 3,165,993,388 கூட்டுமொத்தத் தொகையான மொத்த கிடைக்க வேண்டிய கணக்கு மீதிகளில் ரூபா 1,458,670,864 அல்லது 46,07% மாத்திரமே சம்பந்தப்பட்ட வாடிக்கையாளர்களால் 2011 ஏப்ரல் 21 வரை உறுதிப்படுத்தப்பட்டிருந்தன.

(ஆ) ரூபா 2,837,653,204 கூட்டுமொத்தத் தொகையான மொத்த கொடுபட வேண்டிய கணக்கு மீதிகளில் ரூபா 1,646,232,961 அல்லது 58% மாத்திரமே சம்பந்தப்பட்ட தரப்பினரால் 2011 ஏப்ரல் 21 வரை உறுதிப்படுத்தப்பட்டிருந்தன.

(இ) 2010 சனவரி தொடக்கம் நொவம்பர் வரை பல்வேறு நிறுவனங்கள் மற்றும் வங்கியின் அலுவலகங்களிற்குக் கொடுக்கப்பட்ட ரூபா 50,000 கூட்டுமொத்தத் தொகையான முற்பணங்கள் 2011 ஏப்ரல் 25 வரையிற்கூட தீர்க்கப்பட்டிருக்க வில்லை.

(ஈ) அரசாங்கத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய ரூபா 134,321,918 தொகையான அட்டுறுவட்டி நீண்டகாலமாக தீர்க்கப்படாமலிருந்தன.

### 1.2.3 இணக்கம் செய்யப்படாத வித்தியாசங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) நடைமுறைச் சொத்துக்கள் மற்றும் நடைமுறைப் பொறுப்புக்களின் கீழுள்ள முறையே ரூபா 8,561,853 மற்றும் ரூபா 4,874,419 தொகையான மீதிகள் 2004 ஆம் ஆண்டிலிருந்து இணக்கம் செய்யப்படாது வைக்கப்பட்டிருந்தன.

(ஆ) நிதிக் கூற்றுக்களுடன் இணைக்கப்பட்ட பட்டோலைகளின்படி, 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான உடைமையாக்கப்பட்ட ஆதனங்களின் மீதி ரூபா 23,685,030 ஆக இருந்தது. ஆனால் வங்கியின் அறவீட்டுப் பிரிவினால் வழங்கப்பட்ட பட்டோலையின்படி அது ரூபா 26,667,062 (பீபீஓ) ஆகக் காட்டப்பட்டிருந்ததுடன் வித்தியாசம் ரூபா 2,982,032 ஆகும்.

(இ) மீளாய்வாண்டிற்கான பிற்போடப்பட்ட வரிக் கணிப்பீட்டிற்கான பொறுமானத்தேய்வு தாக்கல்கள் தொடர்பாக பின்வரும் வித்தியாசங்கள் அவதானிக்கப்பட்டன.

| **நிலையான சொத்துக்களின் பெறுமானத்தேய்வு** | **ரூபா** |
|---|---|
| 2010 இற்கான நிதிக்கூற்றுக்களின் படி | 12,109,631 |
| பிற்பொடப்பட்ட வரிக் கணிப்பீட்டின் படி வித்தியாசம் | 9,788,170 |
| | 2,321,461 |

### 1.2.4 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

கணக்குகளிலுள்ள பின்வரும் விடயங்களை, ஒவ்வொன்றிற்குமெதிராக காட்டப்பட்ட சான்றுகளின்மையால் கணக்காய்வில் திருப்திகரமாக சான்றுறுதி செய்ய முடியவில்லை.

| | **விடயம்** | **பெறுமதி** | **சமர்ப்பிக்கப்படாத சான்றுகள்** |
|---|---|---|---|
| | | ரூபா | |
| (i) | தலதாரி ஹோட்டலில் நடைபெற்ற மகாநாட்டிற்கான செலவினம் | 164,600 | பங்குபற்றியோரின் பட்டியல் மற்றும் நிகழ்ச்சித்திட்ட விபரங்கள் |
| (ii) | விளம்பர முகவர்களுடான விளம்பரச் செலவினம் | 1,400,364 | சம்பந்தப்பட்ட விளம்பர முகவர்களுடனான உடன்படிக்கைகள் |
| (iii) | 06 உறுதிச் சீட்டுக்கள் தொடர்பான செலவினம் | 1,172,298 | பற்றுச்சீட்டுக்கள் |
| (iv) | மாத்தளை மாவட்ட செயலாளருக்கான ‘‘வியவசாயகதவ புதுவ’’ நிகழ்ச்சித்திட்டத்திற்கான கொடுப்பனவுகள் | 500,000 | நிகழ்ச்சித்திட்ட விபரங்கள் மற்றும் விலைப்பிட்டியல்கள் |

**1.2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இனங்காமை**

---

கணக்காய்வில் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்களன், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றின் தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) 2008 ஒக்தோபர் 5 ஆம் திகதிய 06 ஆம் இலக்க சுற்றநிருபத்தால் திருத்தப்பட்ட 2006 சனவரி 25 ஆம் திகதிய 8 ஆம் இலக்க அரசாங்க கொள்வனவு வழிகாட்டிகள் சுற்றுநிருபம் | (i) பொட்டி கூறுவிலைகள் அழைக்காமலும் கேள்விச் சபையின் அனுமதி பெற்றுக்கொள்ளாமலும் விளம்பரச் செலவுகளிற்காக ரூபா 2,642,104 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| | (ii) கூறுவிலைகள் அழைக்காமலும் கேள்விச் சபை அனுமதி பெற்றுக்கொள்ளாமலும் பல்வேறு பொருட்களின் கொள்வனவிற்காக ரூபா 4,317,765 ஆன தொகை செலுத்தப்பட்டிருந்தது. |
| | (iii) ரூபா 100,000 இற்கு மேலான வாகனத்திருத்தக் கிரயம் அமைச்சுச் செயலாளரின் அனுமதியுடன் மாத்திரமே செய்யப்படலாமென்ற போதிலும் வங்கியாலும் மேற்கொள்ளப்பட்ட ரூபா 303,257 தொகையான வாகனத் திருத்தங்கள் தொடர்பாக அத்தகைய அனுமதி பெறப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) நிதிப் பிரமாணங்கள்

| | | |
|---|---|---|
| (i) | நி.பி 341 | அடியிதழ்ப் புத்தகங்களிற்கான பதிவேடு வங்கியின் அம்பாந்தோட்டை கிளையால் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | நி.பி 395(கீ) | வங்கியின் மாத்தளைக்கிளையினால் 2010 யூனிலிருந்து வங்கிக் கணக்கிணக்கக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நி.பி 454 மற்றும் 751 | அம்பலாந்தோட்டடை மற்றும் மாத்தறைக் கிளைகளினால் பொருள் பதிவேடுகள் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | நி.பி 756 மற்றும் 957 | வேண்டப்பட்டவாறு மீளாய்வாண்டிற்கான கணிப்புச்சபை அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

(அ) சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டிற்கான வங்கியின் தொழிற்பாடுகள் விளைவித்திருந்த ரூபா 642.24 மில்லியனான வரிக்கு முன்னரான தேறிய இலாபத்தை முன்னைய ஆண்டிற்கான நேரொத்த வரிக்கு முன்னான தேறிய இலாபமான 119.93 மில்லியனுடன் ஒப்பிடலாம் அது நிதிசார் விளைவுகளில் ரூபா 522.31 மில்லியனான அதிகரிப்பைக் காட்டுகின்றது.

(ஆ) தரப்பட்ட தகவல்களின் படி, வங்கியின் தொழிற்பாட்டு விளைவுகள் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டில் அதிகரித்திருந்தான ஏனைய 04 முன்னைய ஆண்டுகளில் அது குறைந்து செல்லும் போக்கைக் காட்டியது. விபரங்கள் பின்வருமாறு.

| | | 2010 | 2009 | 2008 | 2007 | 2006 | 2005 |
|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) | ரூபா (மில்) |
| (i) | வட்டி வருமானம் | 2,362 | 2,165 | 1,956 | 1,399 | 1,307 | 1,168 |
| (ii) | வட்டி செலவுகள் | 1,368 | 1,939 | 1,636 | 1,002 | 608 | 468 |
| (iii) | தேறிய வட்டி வருமானம் | 994 | 226 | 320 | 397 | 699 | 700 |
| (iv) | ஏனைய தொழிற்பாட்டு வருமானம் | 387 | 505 | 261 | 170 | 117 | 71 |
| (v) | ஏனைய வருமானம் | 1 | 2 | 5 | 2 | 1 | 1 |
| (vi) | மொத்த வருமானம் | 1,382 | 733 | 586 | 569 | 817 | 773 |
| (vii) | மொத்த மீண்டுவரும் செலவுகள் | 740 | 613 | 535 | 445 | 499 | 358 |
| (viii) | வரிக்கு முன்னரான தேறிய இலாபம் | 642 | 120 | 51 | 124 | 318 | 415 |
| (ix) | வரி | 178 | 46 | 30 | 41 | 105 | 102 |
| (x) | வரிக்குப் பின்னர் தேறிய இலாபம் | 463 | 74 | 21 | 83 | 213 | 312 |

இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2005 – 2009 வரையான காலப்பகுதியில் வட்டி வருமானம் ரூபா 1,168 மில்லியனிலிருந்து ரூபா 2,362 மில்லியன் அல்லது 102.23 சதவீதமாக அதிகரித்திருந்ததுடன் வட்டிச் செலவுகள் ரூபா 468 மில்லியனிலிருந்து ரூபா 1,939 மில்லியன் அல்லது 314.32 சதவீதமாக உயர்ந்த விதத்தில் அதிகரித்திருந்ததுடன் 2010 ஆம் ஆண்டில் 1,368 மில்லியன் குறைவடைந்திருந்தது.

(ஆ) சொல்லப்பட்ட இதே காலப்பகுதியில் வரிக்கு முன்னரான தேறிய இலாபம் ரூபா 415 மில்லியனிலிருந்து ரூபா ரூபா 642 மில்லியன் அல்லது 54.7 சதவீதமாக அதிகரித்திருந்ததுடன் வரிக்குப் பின்னரான தேறிய இலாபம் ரூபா 312 மில்லியனிலிருந்து ரூபா 463 மில்லியன் அல்லது 48.4 சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

## 2.2 விகிதங்களும் சதவீதங்களும்

---------------------------------------

தரப்பட்ட தகவல்களின் படி, முன்னைய 06 ஆண்டுகளிற்கான வங்கியின் முக்கிய விகிதங்களில் சில பின்வருமாறிருந்தன.

| | | | 2010 | 2009 | 2008 | 2007 | 2006 | 2005 |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | ------- | ------- | -------- | --------- | ------- | -------- |
| | | | % | % | % | % | % | % |
| (அ) | | இலாபமீட்டும் <u>விகிதங்கள்</u> | | | | | | |
| | i. | தேறிய வட்டி எல்லை | 7.67 | 4.41 | 4.16 | 4.85 | 7.98 | 7.3 |
| | ii. | மூலதனத்தில் வருவாய் | 17.47 | 3.10 | 1.76 | 3.3 | 8.56 | 14 |
| | iii. | சராசரிச் சொத்துக்களின் வருவாய் | 3.57 | 0.72 | 0.38 | 1.1 | 3.11 | 4 |
| (ஆ) | | மூலதன போதிய <u>தன்மை</u> | | | | | | |
| | i. | மூலதனம்/மொத்த சொத்துக்கள் | 14.62 | 13.28 | 16.01 | 19.9 | 23.5 | 26 |
| | ii. | மூலதனம்/ கடன்கள் | 19 | 18 | 19 | 23 | 26 | 28 |
| | iii. | தட்டு I | 26.15 | 25.29 | 27.81 | 56.95 | 76.15 | 87 |
| | iv. | தட்டு II | 26.89 | 25.29 | 28.47 | 57.98 | 77.38 | 89 |
| (இ) | | <u>திரவச் சொத்துக்கள்</u> | | | | | | |
| | i. | திரவச் சொத்துக்கள்/ வைப்புக்கள் (பொறுப்புக்கள்) | 21 | 26 | 12 | 10 | 10 | 12 |
| | ii. | வைப்புக்கள்/கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 85 | 85 | 71 | 61 | 51 | 54 |
| | iii. | கடன் பெறல்/கடன்கள் மற்றும் முற்பணங்கள் | 4 | 5 | 5 | 10 | 13 | 13 |

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் பொழுது மீளாய்வாண்டில் திரவச் சொத்துக்கள் தவிர விகிதங்களும் சதவீதங்களும் அதிகரித்தன.

## 2.3 கடன் நிருவாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### 2.3.1 ஈட்டு, ஊ.சே.நி பெருந்தோட்டத்துறை ஊ.சே.நி கடன்கள் தொடர்பான கடன் பண அவதானிப்புக்களின் நிலைமை.

தரப்பட்ட தகவல்களின் படி, முன்னைய ஆண்டுடன் ஒப்பிட்டு மீளாய்வாண்டிற்காக வழங்கப்பட்ட ஈட்டு ஊ.சே.நி மற்றும் பெருந் தோட்டத்துறை ஊ.சே.நி கடன்களின் நிலைமை கீழே தரப்படுகின்றது.

| | 2010 | | 2009 | | முரண் | |
|---|---|---|---|---|---|---|
| | கணக்குகளின் எண்ணிக்கை | பெறுமதி | கணக்குகளின் எண்ணிக்கை | பெறுமதி | | |
| | | ரூபா மில்லியன் | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | சதவீதம் |
| ஈட்டுக் கடன்கள் | 1,164 | 499 | 1,652 | 523 | (24) | (4.6) |
| ஊ.சே.நி கடன்கள் | 5,082 | 1,124 | 3,851 | 692 | 432 | 62.4 |
| பெருந்தோட்டத்துறை ஊ.சே.நி கடன்கள் | 1,771 | 96 | 2,511 | 130 | (34) | (26.1) |
| மொத்தம் | 8,017 | 1,719 | 8,014 | 1,345 | 374 | 27.8 |

மீளாய்வாண்டிற்கான ஊ.சே.நி கடன்கள் முன்னைய ஆண்டிற்கான ரூபா 692 மில்லியனுடன் ஒப்பிடும் போது ரூபா 1.124 மில்லியனாக இருந்தமையின் விளைவாக ரூபா 432 மில்லியன் அல்லது 62.4 சதவீத அதிகரிப்பு ஏற்பட்டது. ஈட்டுக் கடன்கள் மற்றும் பெருந்தோட்டத்துறை ஊ.சே.நி கடன்கள் தொடர்பாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 2010 ஆண்டில் முறையே ரூபா 24 மில்லியன் மற்றம் ரூபா 34 மில்லியன் அல்லது 4.6 சதவீதம் மற்றும் 26.1 சதவீதத்தால் கடன் மீதிகள் குறைவடைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 2.3.2 கடன்களின் காலப்பகுப்பாய்வு

சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி, 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஈட்டு ஊ.சே.நி மற்றும் பெருந் தோட்டத்துறை ஊ.சே.நி கடன்களின் காலப்பகுப்பாய்வைப் பின்வரும் கூற்று காட்டுகின்றது.

| காலப்பகுதி மாதங்களில் | 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவையிலுள்ள மீதி | | |
|---|---|---|---|
| | ஈட்டுக் கடன்கள் | ஊ.சே.நி கடன்கள் | பெருந் தோட்டத்துறை ஊ.சே.நி கடன்கள் |
| | ரூபா. மில் | ரூபா. மில் | ரூபா. மில் |
| 0 | 3,781 | 1,454 | 158 |
| 1 – 2 | 2,144 | 524 | 36 |
| 3 – 5 | 437 | 345 | 152 |
| 6 -- 11 | 134 | 581 | 163 |
| 12 - 17 | 34 | 2,802 | 326 |
| 18 மற்றும் அதற்கு மேல் | 47 | 108 | 6 |
| மொத்தம் | 6,577 | 5,814 | 841 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஊ.சே.நி. கடன்கள் தொடர்பான ரூபா 5,814 மில்லியனான மொத்த நிலுவைக் கடன் மீதிகளில் ரூபா 2,910 மில்லியனான தொகை ஒரு ஆண்டிற்க்கு மேல் நிலுவையாக உள்ளன.

(ii) பெருந்தோட்டத்துறை ஊ.சே.நி கடன்கள் தொடர்பான ரூபா 841 மில்லியனான மொத்த நிலுவையிலுள்ள மீதிகளில் ரூபா 332 மில்லியன் தொகை ஒரு ஆண்டிற்கு மேல் நிலுவையாக உள்ளன.

(iii) ஊ.சே.நி கடன்கள் மற்றும் பெருந்தோட்டத்துறை ஊ. சே. நி. கடன்கள் தொடர்பான நிலுவையான கடன் மீதிகளை அறவிடுவதற்கு அர்த்த புஷ்டியான நடவடிக்கை எடுத்தமைக்கான சான்றுகளெதுவும் இருக்கவில்லை.

## 2.3.3 மொத்தக் கடன்கள், செயற்பாடற்ற கடன்கள் (என் பீ எல்) மற்றும் என பீஎல் வீதங்கள்

தரப்பட்ட தகவல்களின் படி, மீளாய்வாண்டிற்கான நிலுவையான மொத்தக் கட்ன்கள் மற்றும் என்பீ எஸ வீதங்கள் என்பன முன்னைய 4 ஆண்டுகளுடன் ஒப்பிடப்பட்டு கீழே தரப்படுகின்றன.

### (அ) செயற்பாட்டிலுள்ள கடன்கள்

| | 2010 | 2009 | 2008 | 2007 | 2006 |
|---|---|---|---|---|---|
| | ரூபா. மில் | ரூபா. மில் | ரூபா. மில் | ரூபா. மில் | ரூபா. மில் |
| ஈட்டு | 6,577 | 7,016 | 7,192 | 6,194 | 5,407 |
| ஊ.சே.நி | 5,814 | 5,225 | 4,931 | 3,934 | 3,389 |
| பெருந்தோட்டத் துறை ஊ.சே.நி | 841 | 798 | 715 | 663 | 623 |
| மொத்தம் | 13,132 | 13,039 | 12,838 | 10,841 | 7,419 |

### (ஆ) செயற்பாடற்ற கடன்கள்

| | 2010 | 2009 | 2008 | 2007 | 2006 |
|---|---|---|---|---|---|
| | ரூபா. மில் | ரூபா. மில் | ரூபா. மில் | ரூபா. மில் | ரூபா. மில் |
| ஈட்டு | 653 | 1,278 | 917 | 866 | 1,058 |
| ஊ.சே.நி | 3,836 | 3,714 | 2,898 | 2,235 | 1,979 |
| பெருந்தோட்டத் துறை ஊ.சே.நி | 647 | 618 | 456 | 471 | 356 |
| மொத்தம் | 5,136 | 5,610 | 4,271 | 3,572 | 3,393 |

**(இ) என்பீஎல் விகிதம் (%)**

| | 2010 | 2009 | 2008 | 2007 | 2006 |
|---|---|---|---|---|---|
| ஈட்டு | 9.93 | 18.21 | 12.75 | 13.98 | 19.57 |
| ஊ.சே.நி | 65.98 | 71.08 | 58.77 | 56.10 | 58.39 |
| பெருந்தோட்டத் துறை ஊ.சே.நி | 76.93 | 77.44 | 63.78 | 71.04 | 57.14 |
| மொத்தம் | 38.81 | 43.02 | 33.27 | 32.95 | 45.73 |

இவை தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) மேலே உள்ள கூற்றின்படி, ஈட்டு, ஊ.சே.நி மற்றும் பெருந்தோட்டத்துறை ஊ.சே.நி கடன்கள் தொடர்பான செயற் கூற்று கடன்களின் (என்பிஎஸ்) வீதம் முறையை 9.93%, 65.98% மற்றும் 76.93% ஆக இருந்தன.

(ii) 2006 தொடக்கம் 2010 வரையில் ஊ.சே.நி கடன்கள் தொடர்பான என்பீஎல் வீதம் 58.39 இலிருந்து 65.98 ஆக அதிகரித்திருந்ததுடன் பெருந்தோட்டத்துறை ஊ.சே.நி கடன்கள் தொடர்பாக 57.14 இலிருந்து 76.93 ஆகவும் அதிகரித்திருந்தது.

(iii) மொத்த செயற்பாடற்ற கடன்கள் 2006 இன் ரூபா 3,393 மில்லியனிலிருந்து 2009 இல் ரூபா 5,610 மில்லியனாக ரூபா 2.217 மில்லியனால் அதிகரித்திருந்த அதே நேரம் மொத்த செயற்பாடற்ற கடன்கள் 2009 இன் ரூபா 5,610 மில்லியனிலிருந்து 2010 இல் ரூபா 5,136 மில்லியனாக ரூபா 474 மில்லியனால் குறைத்திருந்தது.

(iv) செயற்பாடற்ற ஊ.சே.நி கடன்கள் 2006 இன் ரூபா 1,979 மில்லியனிலிருந்து 2010 இல் ரூபா 3,836 மில்லியனாக ரூபா 2,157 மில்லியனால் அதிகரித்திருந்ததுடன் செயற்பாடற்ற பெருந்தோட்டத்துறை ஊ.சே.நி கடன்கள் 2006 இன் ரூபா 356 மில்லியனிலிருந்து 2010 இல் ரூபா 647 மில்லியனாக ரூபா 291 மில்லியனால் அதிகரித்திருந்தது.

(v) ஈட்டுக் கடன் அறவீட்டு நடைமுறைககள் தொடர்பான கணக்காய்வுத் தெரிவுச் செவ்வையில் பாரிய நலிவுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1984 தொடக்கம் 1996 வரை வழங்கப்பட்ட ரூபா 552,000 கூட்டு மொத்தமான 04 கடன்கள் தொடர்பான சட்ட நடவடிக்கை எடுப்பதில் நீண்ட தாமதங்களிருந்தன. 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவையிலுள்ள மொத்த மீதிகள் ரூபா 1.732,439 ஆகும்.

(ஆ) 1984 தொடக்கம் 2008 வரை வழங்கப்பட்ட, ரூபா 3,622,000 கூட்டு மொத்தத் தொகையான 08 கடன்கள் தொடர்பான ஈட்டு ஆதனங்களை ஏலத்தில் விற்பனை செய்வதற்காக நடவடிக்கை எடுப்பதில் நீண்ட தாமதங்கள் இருந்தன. 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவையாக உள்ள மொத்த மீதிகள் ரூபா 6,368,574 ஆகும்.

(இ) 1995 தொடக்கம் 2008 வரை வழங்கப்பட்ட ரூபா 10,125,000 கூட்டுமொத்தத் தொகையான 03 கடன்கள் தொடர்பான ஆதனங்களின் விலை மதிப்பீடு கேள்விக்குரிய நிலையிலுள்ளன. 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவையிலுள்ள மொத்த மீதிகள் ரூபா 15,658,988 ஆகும்.

(ஈ) 1995 தொடக்கம் 1996 வரை வழங்கப்பட்ட ரூபா 325,000 கூட்டுமொத்தத் தொகையான 02 கடன்கள் தொடர்பான ஈட்டு ஆதனங்கள் தகுதியான நிலைமையிலிருக்கவில்லை. 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவையிலுள்ள மொத்த மீதிகள் ரூபா 1.259,208 ஆகும்.

(உ) 1984 தொடக்கம் 1996 வரை வழங்கப்பட்ட ரூபா 392,000 கூட்டுமொத்தத் தொகையான 13 கடன்கள் தொடர்பாக கடன் பெற்ற தரப்பினருக்கு ஞாபகம்மூட்டல் நடவடிக்கைகளை எடுப்பதில் நீண்ட தாமதங்கள் இருந்தன. 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலுவையாக உள்ள மொத்த மீதிகள் ரூபா 1,317,197 ஆகும்.

## 2.4 ஈட்டுக் கடன்களின் உடமையாக்கப்பட்ட ஆதனங்கள்

-----------------------------------------------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின்படி, 131 எண்ணிக்கையான உடமையாக்கப்பட்ட ஆதனங்கள் தொடர்பாக 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி முதல் நிலுவையிலுள்ள (பீபீஓ) தொடர்பான ரூபா 26,667,062 ஆன தொகை மற்றும் கிடைக்க வேண்டிய மொத்த தொகை தொடர்பான ரூபா 54,807,912 ஆன தொகை என்பன வங்கிக்கு கிடைக்க வேண்டியனவாக்க காட்டப்பட்டிருந்தன. இவை தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(i) சில உடைமையாக்கப்பட்ட ஆதனங்கள் தொடர்பாக அவற்றை விற்பனை செய்வதற்க்கும் நிலுவை மீதிகளை அறவிடுவதற்க்கும் 2010 ஆம் ஆண்டிலும் கூட விரைவான மற்றும் காத்திரமான நடவடிக்கைகள் எடுத்துக்காட்டப்பட்டதற்கான சான்றுகளெதுவும் இருக்கவில்லை. வங்கியானது மீளாய்வாண்டின் போது 137 ஆதனங்களில் ரூபா 548,243 பெறுமதியான 06 ஆதனங்கள் மாத்திரமே கைதவிர்த்திருந்தது.

(ii) பின்வரும் காரணங்களினால் அனேகமான உடமையாக்கப்பட்ட ஆதனங்களை விற்பனை செய்யமுடியவில்லை.

(அ) பிணையாக வைக்கப்பட்ட ஆதனங்களின் சந்தை விலையிலும் பார்க்க நிலுவையான கடன் மீதிகள், திரண்ட வட்டி மற்றும் ஏனைய செலவுகள் மேலதிகமாக இருந்தமையால் அத்தகைய உயர்ந்த விலைகளின் ஆதனங்களை விற்க முடியாதிருந்ததாக கணக்காய்வில் அவதானிக்கப்பட்டது. மேலும் ஆறு உடமையாக்கப்பட்ட ஆதனங்களிருந்து ஏற்பட்ட தேறிய நட்டம் ரூபா 1,272,076 ஆக இருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

(ஆ) வெற்றிடமாக இல்லாத நிலைமை ஆதனங்களிற்கு போதிய பாதுகாப்பின்மை மற்றும் முறையற்ற விலை மதிப்பீட்டு நடைமுறை என்பன உடைமையாக்கப்பட்ட ஆதனங்களின் விற்பனையை பாதகமான முறையில் பாதித்திருந்தன.

## 2.5 மனிதவள முகாமைத்துவம்

தரப்பட்ட தகவல்களின் படி, முன்னைய இரண்டு ஆண்டுகளுடன் ஒப்பிட்டு மீளாய்வாண்டிற்கான அனுமதிக்கப்பட்ட ஆளணி உண்மையான ஆளணி மற்றும் வெற்றிட நிலைமை என்பன கீழே தரப்படுகின்றன.

| பதவியினர் வகை | உள்ளவாறு அனுமதிக்கப்பட்ட ஆளணி | | | உள்ளவாறு உண்மையான ஆளணி | | | உள்ளவாறு வெற்றிட நிலைமை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2008.12.31 | 2009.12.31 | 2010.12.31 | 2008.12.31 | 2009.12.31 | 2010.12.31 | 2008.12.31 | 2009.12.31 | 2010.12.31 |
| நிறைவேற்றுனர்கள் | 183 | 183 | 183 | 161 | 167 | 159 | 22 | 16 | 24 |
| நிறைவேற்றுனர் ஆகாதோர் | 150 | 150 | 150 | 125 | 116 | 114 | 25 | 34 | 36 |
| முகாமைத்துவ பயிலுனர் | 15 | 15 | 15 | - | - | - | 15 | 15 | 15 |
| சிற்றூலியர்கள் | 53 | 53 | 53 | 42 | 35 | 34 | 11 | 18 | 19 |
| அமைய | - | - | - | - | 02 | 01 | - | (02) | (01) |
| மொத்தம் | 401 | 401 | 401 | 328 | 320 | 308 | 73 | 81 | 93 |

**2.6 இணங்காணப்பட்ட நட்டங்கள்**

---

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**

(அ) ரூபா 748,908 தொகையான கிடைக்க வேண்டியவைகள், கடனுக்குப் பிணையாக வைக்கப்ப்ட்ட ஆதனம் கடலரிக்கப்பட்டதனால் பதிவழிப்புச் செய்யப்பட்டது.

(ஆ) சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி. உடமையாக்கப்பட்ட ஆதனங்களை விற்பனை செய்த பொழுது ரூபா 245,818 கூட்டு மொத்தத் தொகையான நட்டங்கள் ஏற்பட்டிருந்தன.

**2.7 இணங்காணப்படாத கொடுக்கல் வாங்கல்கள்**

---

**பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.**

(அ) கீழே காட்டப்பட்டுள்ளவாறு 2008 ஆம் ஆண்டிலிருந்து கடன் கணக்குகளில் பகிர்வு செய்யப்படாத மீதிகள் படிப்படியாக அதிகரித்திருந்தன.

| **திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு** | **கணக்குகளில் காட்டப்பட்ட தொகை** |
|---|---|
| | **ரூபா** |
| 2008 | 140,275,275 |
| 2009 | 163,649,853 |
| 2010 | 227,267,479 |

(ஆ) மீளாய்வாண்டின் இறுதியிலுள்ளவாறான ரூபா 6,829,468 கூட்டு மொத்தத் தொகையான வைப்புக்கள் சம்பந்தப்பட்ட வைப்பாளர்களிற்கு செலவு வைக்கப்பட்டிருக்கவில்லை.

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணங்காணப்படாத வைப்புக்களின் காலப்பகுப்பாய்வ கீழே தரப்படுகின்றன.

| திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு | கணக்குகளில் காட்டப்பட்டுள்ள தொகை |
|---|---|
| | ரூபா |
| 2004 | 5,767,325 |
| 2005 | 7,654,648 |
| 2006 | 11,022,769 |
| 2007 | 12,339,334 |
| 2008 | 8,189,152 |
| 2009 | 7,262,062 |
| 2010 | 6,829,468 |

மேற்படி விபரங்களின் படி, 2004 ஆம் ஆண்டிலிருந்து 2007 வரை இணங்காணப்படாத வைப்புக்கள் ரூபா 5.767,325 இலிருந்து ரூபா 12,339,334 ஆக படிப்படியாக அதிகரித்திருந்தது. எனினும் 2008 திசெம்பர் 31, 2009 திசெம்பர் 31 மற்றும் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இணங்கானப்படாத வைப்புக்களின் மீது குறைந்து செல்லும் கூற்றைக் காட்டியது.

## 2.8 அதிகாரமளிக்கப்படாத கொடுக்கல் வாங்கல்கள்

நாளாந்த வங்கி நடைமுறைக் கணக்கு மீதிகள் தொடர்பான ரூபா 2,000,000 ஆன உச்சஎல்லை ஒரு வங்கிக் கிளையில் பின்வருமாறு பல்வேறு சந்தர்ப்பங்களில் விஞ்சியிருந்தது.

| திகதி | வைத்திருந்த மீதி | மேலதிகத்தொகை |
|---|---|---|
| 2010-05-04 | 2,557,776 | 557,776 |
| 2010-07-01 | 3,141,548 | 1,141,548 |
| 2010-07-05 | 3,794,493 | 1794,493 |
| 2010-07-07 | 2,859,535 | 859,535 |
| 2010-07-26 | 2,624,846 | 624,846 |

## 2.9 உள்ளகக் கணக்காய்வு

---------------------------------

உள்ளகக் கணக்காய்வை நிறுவுதல் மற்றும் செயற்பாடுகள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) உள்ளகக் கணக்காய்வு நியமங்கள் மற்றும் ஒழுக்கக் கோவை

--------------------------------------------------------------------------------------

திறைசேரியின் முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்தால் வழங்கப்பட்ட 2009 ஒக்தோபர் 07 ஆம் திகதிய டிஎம்ஏ∴.2009(3) ஆம் இலக்க சுற்றுநிருபத்தின்படி, உள்ளகக் கணக்காய்வுப் பட்டயம் மற்றும் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தை திட்டமிட்டிருக்கவில்லை. உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்ட்டங்களைத் தயாரித்தபொழுது பின்வரும் உள்ளகக் கணக்காய்வு நியமங்கள் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(i) இணைப்பு - 2 - செயலாற்றல் நியமங்கள் - இல.2011 - இடர் முகாமைத்துவம்

(ii) இணைப்பு - 2- செயலாற்றல் நியமங்கள் - இல. 2201 திட்டமிடல் கவனஈர்ப்பு

### (ஆ) 2010 ஆம் ஆண்டிற்கான வருடாந்த உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டம்

------------------------------------------------------------------------------------------------------------------------

வங்கி நடவடிக்கைகளிற்கு மிகவும் முக்கியமான பின்வரும் பிரதான பரப்புக்கள் மீளாய்வாண்டிற்கான வருடாந்த உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தில் உள்ளடக்கப்படவில்லை.

(i) பின்வருவனவற்றின் மீளாய்வு மற்றும் மதிப்பாய்வு

- காலாண்டு மற்றும் வருடாந்த நிதிக்கூற்றுக்கள்
- 2010 ஆம் ஆண்டிற்கான நடவடிக்கைத்திட்டம் மற்றும் 2010 - 2012 காலப்பகுதிக்கான கூட்டுத்திட்டத்தின் அமுலாக்கல்
- வங்கியின் ஒட்டுமொத்த செயலாற்றல்
- வங்கியின் இடர் முகாமைத்துவம்
- வங்கியின் காசுப் பாய்ச்சல் முகாமைத்துவம்

- குறிப்பாக ஆட்சேர்ப்பு பதவிஉயர்வு முன்னேற்றம், பதவியணியினர் நிர்வாக முன்னேற்றம், தொடர்பான விடயங்களில் மனிதவளமுகாமைத்துவம்

- விளம்பரச் செலவுகள்

(ii) பொருட் பதிவேட்டை பௌதீக சொத்துக்களுடன் சரிபார்த்தல்.

(iii) கணக்காய்வாளர் தலைமை அதிபதித் திணைக்களத்தால் வழங்கப்பட்ட கணக்காய்வு ஐயவினாக்களை மீளாய்வு செய்தல் மற்றும் அவற்றிற்கான முகாமைத்துவத்தின் பதிவளித்தல்

(iv) பொது முயற்சிகள் குழுவின் (சீஓபீஈ) சிபார்சுகளின் அமுலாக்கலை மீளாய்வு செய்தல்.

(இ) 2010 ஆம் ஆண்டிற்கான வருடாந்த உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டத்தில் பட்டோலைப்படுத்தப்பட்ட பினவரும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(i) நிலுவைகள் மற்றும் நிலுவையிலுள்ள கடன்களின் அறவீடு

(ii) தலைமை அலுவலகம் மற்றும் வெளியிட கிளைகளிலுள்ள இணக்கம் செய்யப்படாத கணக்குகள் மற்றும் இனங்காணப்பட்டாத வைப்புக்கள்

(iii) கொள்வனவு

(iv) ஆதனங்கள் விலை மதிப்பீடு

(v) மேந்தலைச் செலவுகள்

(vi) உள்ளகக் கணக்காய்வில் உள்ளடக்கப்பட வேண்டுமெனப் பட்டியலிடப்பட்ட 8 கிணைகளில் ஒரு வெளியிடக் கிளையில் மட்டுமே கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

## 2.10 கூட்டுத்திட்டம், வருடாந்த நடவடிக்கைத்திட்டம் மற்றும் வருடாந்த பாதீடு

---

2010 - 2012 வரையான காலப்பகுதிக்கான கூட்டுத்திட்டத்தில் அமைக்கப்பட்ட குறித்த சில இலக்குள் மற்றும் 2010 ஆம் ஆணடிற்கான நடவடிக்கைத் திட்டம் மற்றுடும் வருடாந்தப் பாதீடு என்பவற்றின் சொல்லப்பட்ட குறித்த சில இலக்குகள் என்பன அடையப்பட்டடிருக்கவில்லை.

## 3. முறைமைகள் மற்றுடும் கட்டுப்பாடுகள்

---

கணக்காய்வின் போது முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகளில் மேற்கொள்ளப்பட்ட அவதானிப்புக்கள் காலத்திற்குக்காலம் வங்கியின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டப் பரப்புகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) உடைமையளிக்கப்பட்ட ஆதனங்கள்

(ஆ) நிலுவையாக உள்ள கடன் மீதிகள்

(இ) கணக்கீடு

(ஈ) உள்ளகக் கணக்காய்வு

(உ) கட்டுப்பாட்டுக் கணக்குகளை இணக்கம் செய்தல்

(ஊ) முற்பணங்களின் தீர்ப்பனவு

(எ) மீதிகளின் உறுதிப்படுத்தல்கள்

(ஏ) சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்குதல்